**கவனிக்க** .- *03.05.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1810 - 2013 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2013.05.10

*1810ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி* III - *காணிகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 110 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** (i) *மீள குடியமர்த்துதல் அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***கவனிக்க.-*** *இவ் வர்த்தமானியின் பகுதி IV இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிரல் -யூன்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/21870
மாகாண காணி ஆணையாளரின்
இல. : மஹி/சங்/01/ 05/34

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், மினிபே பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அசலக நகரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உடுதஹ கிராம அ.க.பி. 289 திட்ட வரைபடத்தில் காணித் துண்டு இல.70 எனக் காட்டப்பட்டுள்ளதுமான ஹெக்டேயர் 0.007 பிரமாண அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி தொன் சிமன் படபெந்திகே மாலினி ஆரியதாச என்பவரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: வாய்க்கால் ஒதுக்கீடு;
கிழக்கு : காணித் துண்டு 07;
தெற்கு : பிரதேச சபை காணி;
மேற்கு : காணித் துண்டு 69.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995. 06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்குத் தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை உப குத்தகை அனுமதிக்கப் பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.04.22

5-227

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/35185
மாகாண காணி ஆணையாளரின்
இல. : சிபிஎல்/எல்சி /எல்டி/4/1/28/150

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், கலேவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தலகிரியாஎம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தலகிரியாஎம எனும் கிராம அ.க.பி 401 திட்ட வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 497 எனக் காட்டப்பட்டுள்ளதுமான ஹெக்டேயர் 0.039பிரமாண அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறுஇலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதென என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: கா.து.496, 358, 367;
கிழக்கு: கா.து.367,498;
தெற்கு: கா.து.498;
மேற்கு: கா.து.498, 496.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

தவணைப்பணம்.- வருடாந்த குத்தகைப் பணத்தின் மூன்று மடங்காகும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வணிக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும்வரை உப குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது;

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.04.22.

5-228

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/23358
மாகாண காணி ஆணையாளரின்
இல. : சிபிசி/8/1/9/55

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பானபொக்க கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கந்தன்கம கிராமத்தில் அமைந்துள்ளதும் பி.பி.மஹ 2333ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 32 எனக் காட்டப்பட்டுள்ளதுமான 10 பேர்ச்சர்ஸ் விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. அமரசூரிய ஆராச்சிலாகே அபேசிங்க என்பவரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதென என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: ஏ.ஏ. அபேசிங்க, டி.எம். டிகிரிபண்டா, ஏ.ஏ. திலகரத்ன என்பவர்களின் காணியின் எல்லை;
கிழக்கு: ஏ.ஏ.திலகரத்ன என்பவரின் காணியின் எல்லை;
தெற்கு: ஏ.ஏ. திலகரத்ன என்பவரின் காணியின் எல்லை மற்றும் குடியேற்ற பாதை;
மேற்கு: குடியேற்ற பாதை மற்றும் ஏ.ஏ. அபேசிங்க என்பவர் வசிக்கும் காணியின் எல்லை (காணியின் எஞ்சிய பகுதி).

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.05.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மூன்று மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக் கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப்பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணி செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.04.22.

5-226

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/திருகோணமலை/(பொது)
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : கேஎன்/எல்டிஎல் 6992/(95)

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படடிருக்கும் 04 நபர்களால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைவான காணித்துண்டுகளை வணிக நோக்கத்திற்காக நீண்டகால குத்தகைக்கு பெற்றுத் தருமாறு விண்ணப்பித்துள்ளனர் என்பதை இவ் அறிக்கை அறியத்தருகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

அட்டவணை

| இலக் கம் | காணி ஆணையாளர் இலக்கம் | விண்ணப்பதாரரின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | கிராமம் | திட்ட வரைபட இலக்கம் | காணித் துண்டு இலக்கம் | நிலப் பரப்பு | காணியின் எல்லைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4/10/ 32795 | பெந்தரகுருகே சாணக சம்பத் குருகே | கந்தளாய் | 227/கந்தளாய் நகரம் | கந்தளாய் நகரம் | எப்.டி.பி.2 அதிகமான-17 | 6992 | 0.082 ஹெக். | வடக்கு:காணித்துண்டு இல.31 98 மற்றும் 3199; கிழக்கு :காணித்துண்டு இல.69 91; தெற்கு:காணித்துண்டு இல.69 91; மேற்கு:காணித்துண்டு இல.6991மற்றும் அக்ரபோதி மாவத்தை. |
| 2 | 4/10/32800 | சமரதிவாகர விக் ரம சிங்கே சரத் | கந்தளாய் | 227/கந்தளாய் நகரம் | கந்தளாய் நகரம் | எப்.டி.பி.2 அதிகமான-18 | 6981 | 0.0051 ஹெக். | வடக்கு:காணித்துண்டு இல.69 82; கிழக்கு:வரைபட இல.5896 இல் எல்.என். 01; தெற்கு:வரைபட இல.5896இல் எல்.என்.01; மேற்கு:காணித்துண்டு இல.6991 மற்றும் அக்ரபோதி மாவத்தை. |
| 3 | 4/10/32809 | தானியெல் ஆராச் சிலாகே விமலசிரி | கந்தளாய் | 227/கந்தளாய் நகரம் | கந்தளாய் நகரம் | குடியேற்ற அதிகாரியின் திட்டவரைபடம் | ஏ | 5.5 ப | வடக்கு: எல்.என்.3239 மற்றும் எல்.என்.3240; கிழக்கு: அக்ரபோதி மாவத்தை தெற்கு: காணி 6903; மேற்கு:காணிஇல.6902. |
| 4 | 4/10/32799 | பெந்தரகுருகே சாணக சம்பத் குருகே | கந்தளாய் | 227/கந்களாய் நகரம் | கந்தளாய் நகரம் | எப்.டி.பி.2 இரண்டாவது திட்டம்-85 | 3199 | 1ப | வடக்கு:எல்.என்3198; கிழக்கு:எல்.என்.3200; தெற்கு:எல்.என்.3200; மேற்கு:எல்.என்.3175. |

*3.* குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள். (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும் இக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

*தண்டப்பணம்*.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி கூட்டுறவு சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை உப குத்தகை அனுமதிக்கப் பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

*4.* இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப்ளியு. டி. சேபாளிக்கா,
உதவிக் காணி ஆணையாளர் (காணிகள்),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.04.09

05-139